ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1933/36 - 2015 සැප්තැම්බර් මස 25 වැනි සිකුරාදා - 2015.09.25
*1933/36 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/07/2013/எச்டபிள்யு/104
எனது குறிப்பு இல.: 4/3/1/3769/23

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், களுத்தறை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 17 - டெஷத்தர கிராம சேவகர் பிரிவில், களுத்துறை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதி சார்பாக நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. க.4474 இல் துண்டு இல. 01 இல் விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0008 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித் துண்டின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:-

1. **துண்டு இல. 01**
காணியின் பெயர்: புளுகஹவத்தை; விபரம் : வீதி ; உரிமை கோருபவர்: அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : டீ.எஸ்.வீரக்கொடி, வரி மதிப்பீட்டு இல. 1, 3 மற்றும் 5, களுத்துறை வடக்கு; விஸ்தீரணம்: 0.0008 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு களுத்துறை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விமால் குணதுங்க,
பிரதேச செயலாளர்,
களுத்துறை.

பிரதேச செயலகம்,
களுத்துறை,
2015, செத்தெம்பர் 25.

10 - 460

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ஜீஓடீஎஸ்/எல்என்டீ/05/ஏசீகியூ/01
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/6/2013/எச்டப்ளியு/366

2014.10.10 அத்திகதிய 1883/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலுக்கு இணங்க வரைப்பட இலக்கம் தவறு என்பதால் அதன் பொருட்டு ஆ. வ. 304, இ. கி. வ 611 பிற்சேர்க்கை இல. 2 தாள் இல. 3, இ. கி. வ. 613 பிற்சேர்க்கை இல. 14 தாள் 17, இ. கி. வ. 699 பிற்சேர்க்கை இல. 12 தாள் இல. 12, இ. கி. வ. 606 பிற்சேர்க்கை 18 தாள் இல. 19 வரைபடம் ஐந்து அறிவித்தலுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேலும், வர்த்தமானி அறிவித்தலின் படி கிராம அலுவலர் பிரிவு மற்றும் சகல காணிகளும் குறிப்பிட்ட விதம் ஒவ்வொன்றும் வரைபடத்தின் கீழ் அமைந்திருக்க வேண்டுமென மேலும் தெரிவித்து கொள்கின்றோம்.

1. ஆ. வ. - இ 304 - ரக்வானை நகரம்
துண்டு இல. 2 தொடக்கம் 17 வரையான காணி

2. இ. கி. வ. 611/2/3 - வேரலுகஹமுல
துண்டு இல. 89 தொடக்கம் 335 வரையான காணி

3. இ. கி. வ. 613/14/17 - கொட்டல
துண்டு இல. 283 மற்றும் 424 வரையான காணி

4. இ. கி. வ. 699/12/12 - ரக்வானை வடக்கு
துண்டு இல. 773 தொடக்கம் 820 வரையான காணி

5. இ. கி. வ. 606/18/19 - மாதம்பே வடக்கு, மாதம்பே தெற்கு, ஹொரமுல
துண்டு இல. 1653 மற்றும் 2509 வரையான காணி

பீ. எஸ். ஜீ. ருவன்சிறி,
பிரதேச செயலாளர்,
கொடகவெல.

பிரதேச செயலகம்,
கொடகவெல,
2015, செத்தெம்பர் 22.

10 - 466